## வவுனியா நகர சபை
## வவுனியா மாவட்டம்

-----------------------------------------

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 18 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஒக்தோபர் 18 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வவுனியா நகர சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 1992 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட ‘‘நிதன்’’ நிதியத்தில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி வட்டியுடன் ரூபா 482,615 ஆக இருந்தும் இந்த நிதியம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் அல்லது அடிப்படை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்தொகையில் நிலையான சொத்துக்களின் கீழ் ரூபா 21,311,807 தொகையான பூர்த்தி செய்யப்படாத நிர்மாணங்களின் பெறுமதியொன்று உள்ளடக்கப்பட்டிருந்தமையால் நிலையான சொத்துக்களின் பெறுமதி அந்த அளவினால் மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது.

(இ) பெறுமதி வெளிப்படுத்தப்படாத 05 பேரூந்து வண்டிகள், இழுவைப் பெட்டியுடன் 03 உழவு இயந்திரங்கள் மற்றும் ஏனைய 13 இயந்திர உபகரணங்கள் என்பன பல்வேறு நிறுவனங்களிலிருந்து சபைக்குக் கிடைத்திருந்த போதிலும், அந்த சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 3,956,379 தொகையான நிலையான வைப்பு வட்டி வருமானம் நிதிக்கூற்றுக்களில் ரூபா 3,978,130 ஆகக் காண்பிக்கப்பட்டமையால் வட்டி வருமானம் ரூபா 21,751 இனால் மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்குரிய அறிவித்தல் பதாதைகளின் மூலம் கிடைத்த ரூபா 1,358,331 தொகை கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்தப் பணம் எந்தக் காலப்பகுதிக்குரியது என கணக்குகளின் மூலம் வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன், 54 அறிவித்தல் பதாதைகளுக்காக மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய ரூபா 533,950 பெறுமதியொன்று வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அந்தப் பணம் கிடைக்கவேண்டிய வருமானமாக ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது கடை வாடகை வருமானம் மற்றும் நிலையான வைப்பு வட்டி வருமானம் காசு அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

(எ) கடை உரிமையாளர்களின் வைப்புக் கணக்குகளின் ஆரம்ப மீதி நிதிக்கூற்றுக்களினதும் பட்டோலைகளினதும் பிரகாரம் முறையே ரூபா 3,107,924 மற்றும் ரூபா 3,181,444 ஆக இருந்தமையால் ரூபா 73,520 தொகையான வேறுபாடொன்று காணப்பட்டது.

(ஏ) 2012 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு குடியிருப்பு சிறுவர் பூங்காவை வெளி நிறுவனமொன்றிற்கு வாடகைக்கு வழங்கிய வகையில் கிடைக்கவேண்டிய ரூபா 200,000 வருமானம் கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 20,000,000 நிலையான வைப்பிற்குரிய வட்டி நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆகஸ்ட் வரை கிடைக்க வேண்டிய ரூபா 45,706,668 தொகையான முத்திரைக் கட்டண வருமானம் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

கடை உரிமையாளர்களின் வைப்புக் கணக்கின் ஆரம்ப மீதி நிதிக்கூற்றுக்களிலும் பட்டோலைகளிலும் முறையே ரூபா 3,107,924 மற்றும் ரூபா 3,181,444 ஆக இருந்தமையால் ரூபா 73,520 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் மீண்டெழும் செலவினங்களை விஞ்சிய வருமானம் ரூபா 48,873,451 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினங்களை விஞ்சிய வருமானம் ரூபா 31,484,368 ஆகும்.

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கீழே காண்பிக்கப்படுகின்ற சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| **நிதிப் பிரமாணம்** | |
| நிதிப் பிரமாணங்கள் 133 மற்றும் 134 | மீளாய்வாண்டின் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| நிதிப் பிரமாணம் 342(1) | நகர சபையின் ஆதன வரிகளைச் சேகரிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்ற பற்றுச்சீட்டுப் புத்தகம் மற்றும் தற்காலிக பற்றுச்சீட்டு புத்தகம் பெறுவனவு, விநியோகித்தல் மற்றும் மீளக் கையளித்தல் என்பன எந்தப் பொறுப்புமின்றி மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| நிதிப் பிரமாணம் 343 | மீளாய்வாண்டிற்கு முன்னைய ஆண்டுகளில் பயன்படுத்திய மற்றும் பயன்படுத்தாத அடியிதழ் புத்தகங்கள் தொலைந்து போயிருந்தும் அது தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| நிதிப்பிரமாணம் 395(ஏ) | நிதிப் பிரமாணங்களுக்கு முரணாக நகர சபையின் காசேட்டைத் தயாரித்தல், காசோலை வரைதல் மற்றும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் என்பன ஒரு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| நிதிப் பிரமாணம் 571(2) மற்றும் (3) | 02 வருடங்களைக் கடந்த கூட்டுப்பெறுமதி ரூபா 1,614,484 தொகையான 03 வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கோ அல்லது மீளச் செலுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| பொது நிர்வாகச் சுற்றறிக்கை<br>---------------------------------------------------------------------- | |
| 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | 06 மாதங்களுக்கு ஒரு தடவை நிறுவனத்திற்குச் சொந்தமான வாகனங்களின் எரிபொருள் நுகர்வு |

பரீட்சிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், நகர சபையின் வாகனங்கள் தொடர்பாக அவ்வாறான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 வாடகை

(அ) நகர சபைக்குச் சொந்தமான நடமாடும் கடை உரிமையாளர்களிடமிருந்து நாளாந்தம் சேகரிக்கப்பட வேண்டிய வாடகைக் கட்டணங்கள் சேகரிக்கப்படாமையினால் 2013 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 140,500 தொகை தொடர்ந்தும் நிலுவையாகக் காணப்பட்டது.

(ஆ) நகர சபைக்குச் சொந்தமான பல வருட காலமாக முன்கொண்டுவரப்படுகின்ற நவீன சந்தையில் வாடகையாக அறவிட வேண்டிய ரூபா 300,375 தொகையொன்று தொடர்ந்தும் நிலுவையாகக் காணப்பட்டது.

(இ) நகர சபைக்குச் சொந்தமான பஸ் நிலையத்தில் அமைந்துள்ள கடைகளிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 305,325 தொகையான கடை வாடகை வருமானம் சில வருடங்களாக நிலுவையாகக் காணப்பட்டது.

(ஈ) நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள நிலத்தில் உண்மையான உரித்து உறுதிப்படுத்தப்படாத அனுமதியற்ற 06 கடை உரிமையாளர்களினால் வாடகைக் கட்டணமாக வருடாந்தம் ரூபா 798,000 தொகையொன்று வவுனியா கூட்டுறவுச் சங்கத்திற்கு செலுத்தப்படுவதுடன் அந்தக் கடைகள் அமைந்துள்ள நிலத்தின் உரித்தை உறுதிப்படுத்தி அந்த வருமானத்தை நகர சபைக்குப் பெற்றுக்கொள்வதற்கோ அல்லது அனுமதியற்ற நிர்மாணம் எனின் அவற்றை அகற்றுவதற்கோ தேவையான சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு இது வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.2 சந்தை அனுமதிப்பத்திரம்

---

(அ) 2009 ஆம் ஆண்டு முதல் சந்தை வியாபாரங்களுக்கான அனுமதிப்பத்திரக் கட்டணம் திருத்தம் செய்யப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் வருமானத்தை அதிகரித்துக்கொள்வதற்குக் காணப்பட்ட சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) வியாபாரங்களின் தன்மையின் பிரகாரம் சந்தை வியாபாரங்கள் வகைப்படுத்தப்பட்டு காண்பிக்கப்படாதிருந்ததுடன் அந்த வியாபாரங்களின் தன்மையின் பிரகாரம் அதன் நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணங்களை கணிப்பீடு செய்யும் முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.4 மிகைக் கட்டணம்

---

நகர சபைக்குச் சொந்தமான கடைகளிலிருந்து 2004 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளில் கிடைக்க வேண்டிய ரூபா 580,325 தொகையான கடை வாடகை வருமானம் உத்தியோகத்தர்களின் செயற்திறனின்மையின் காரணமாக இது வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

---

### 2.5.1 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

---

சபைக்குச் சொந்தமான 06 பெரிய உழவு இயந்திரங்கள், வீதிச் செப்பனிடுகையொன்று மற்றும் 02 கை உழவு இயந்திரங்கள் என்பன நீண்ட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் குறைவான பயன்பாட்டுடன் தரித்து வைக்கப்பட்டிருந்தது.

### 2.5.2 வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

---

2014 ஒக்தோபர் 17 ஆந் திகதி அரசாங்க நிதித் திணைக்களத்தின் மூலம் விநியோகிக்கப்பட்ட அரசாங்க நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2014 இன் 3.5 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு நிதியாண்டிலும் பெப்ரவரி 26 ஆந் திகதிக்கு முன்னர் பற்றாக்குறை மற்றும் மிகைகள் தொடர்பான அறிக்கையின் பிரகாரம் அழிக்கப்பட வேண்டிய பொருட்களை அழித்தல், பழுதுபார்க்க வேண்டிய பொருட்களை பழுதுபார்த்தல் மற்றும் ஏலத்தில் விற்பனை செய்யப்படவேண்டிய பொருட்களை

ஏலத்தில் விற்பனை செய்து முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டில் பொருள் மெய்மையாய்வுச் சபையினால் விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட 123 பொருள் வகைகள், அழிவடையச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட 22 பொருள் வகைகள் மற்றும் பழுதுபார்ப்பதற்குத் தீர்மானிக்கப்பட்ட 01 பொருள் வகை என்பன தொடர்பான மேற்கூறப்பட்ட நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் 2016 யூலை 13 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

வவுனியா மரக்கறிச் சந்தையில் அகற்றப்படுகின்ற மரக்கறிகளைப் பயன்படுத்தி கூட்டுப்பசளை உற்பத்தி செய்யும் செயற்திட்டத்தின் 2015 ஆம் ஆண்டில் உற்பத்திகளின் பெறுமதி ரூபா 7,980 ஆக இருந்ததுடன் அதன் உற்பத்திப் பெறுமதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக தொழிலாளர் சம்பளம், பாதுகாப்பு மற்றும் தொலைபேசி போன்ற செலவினங்களுக்காக ரூபா 1,303,560 தொகையான செலவினமொன்று ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த செயற்திட்டம் சுற்றாடலுக்கு இசைவில்லாத மற்றும் இலாபம் எதிர்பார்க்கப்படாத செயற்திட்டமாக இருந்தபோதிலும், வருமானத்தை விஞ்சி ரூபா 1,295,580 தொகை செலவிடப்பட்டிருந்தும் செயற்திட்டம் செயற்திறனற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.7 ஒப்பந்த நிர்வாகம்

(அ) பண்டாரிக்குளம் முதல் உலுக்குளம் வரை வீதியில் காணப்பட்ட அகலத்தை விட குறைந்த அகலத்தையுடையதாக கல் மற்றும் தார் இட்டு அமைக்கப்பப்பட்டிருந்தது.

(ஆ) பண்டாரிக்குளம் முதலாவது மாவத்தை, நியமத்திற்குப் புறம்பாக 45 மீற்றர் துார அளவை நிர்மாணிப்பதற்காக ரூபா 279,000 நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(இ) பன்னியார் மஹிலம்குளம் வீதியின் ஓரங்களை நிர்மாணிக்கும் போது நிர்மாணிக்கப்பட வேண்டிய அகலத்தை விட குறைவான அகலத்துடன் நிர்மாணித்து திட்டமிடப்பட்ட அளவிற்கு கொடுப்பனவு செய்யப்பட்டமையினால் ரூபா 10,057 தொகையொன்று மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.8 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

---

(அ) பல வருட காலமாக முன்கொண்டுவரப்படுகின்ற கூட்டுப்பெறுமதி ரூபா 1,373,664 தொகையான 04 கடன்பட்டோர் மீதிகள் மற்றும் கூட்டுப்பெறுமதி ரூபா 8,823,050 தொகையான 02 கடன்கொடுத்தோர் மீதிகள் என்பவற்றைத் தீர்த்து வைப்பதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நகர சபை அதிகாரப்பிரதேசத்தில் ஆதனவரி உரிமையாளர்களினால் அந்த வரி உரிமையாளர்களின் காணிகளில் மேற்கொள்ளப்படுகின்ற அனுமதியற்ற நிர்மாணங்களுக்காக 2000 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 13 வரி உரிமையாளர்களுக்கு மீளச் செலுத்த வேண்டிய ரூபா 827,508 தொகை கணக்குகளில் பொறுப்பொன்றாகக் காண்பிக்கப்பட்டிருந்தபோதும், அந்த நிர்மாணங்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை இதுவரையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நானாவித கொள்வனவுகளுக்காக 2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த ரூபா 74,083 தொகையான முற்பணம் கணக்காய்வுத் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இது தொடர்பாக உதவி உள்ளூராட்சி ஆணையாளரின் ஆலோசனை பெறப்படும் வரை இருந்ததாகவும் நகர சபையின் செயலாளரினால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

(ஈ) வவுனியா நகர சபையில் ஆதனவரி சேகரித்தல் பதிவேடுகளில் காலாண்டு ரீதியாக அங்கீகரிக்கப்படாமல் நிறுத்தப்பட்ட வரித் தகவல்களைத் தயாரித்தல் மற்றும் அறிக்கையிடல்களுக்காக தனியார் கம்பனியொன்றிலிருந்து வருடத்திற்கு ரூபா 180,000 உடன்படிக்கை செய்யப்பட்ட தொகையில் கணனி மென்பொருளொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த கணனி மென்பொருளின் மூலம் நிலுவை ஆதனவரி வருமானம் மற்றும் அறவிடல் தொடர்பான மீதிகளின் பகுப்பாய்வு என்பவற்றைப் பெற்றுக்கொள்ளும் வசதிகள் காணப்படாமையின் அடிப்படையில் கணனி மென்பொருள் கொள்வனவு செய்யப்பட்டதன் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(உ) 2009 பெப்ரவரி 19 ஆந் திகதிய 1589/20 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் நகரசபைக்குச் சொந்தமான நகர அபிவிருத்தி அதிகாரசபை நிர்வகித்த விருந்தினர் விடுதி 2009 ஏப்ரல் 30 முதல் நகர சபைக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. இந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நகர சபையால் அந்த விருந்தினர் விடுதியை கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. நகர சபைக்குச் சொந்தமான மேற்கூறப்பட்ட பெறுமதியான ஆதனங்கள் (விருந்தினர் விடுதி) 1980 ஆம் ஆண்டு முதல் இது வரை நபரொருவருக்கு முறையான கேள்வி கோரலின்றி லங்கா றெஸ்ட் ஹவுஸ் லிமிடெ் நிறுவனம் ஊடாக ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. லங்கா றெஸ்ட் ஹவுஸ் லிமிடெட் நிறுவனம் குத்தகையாளரிடமிருந்து அறவிடப்படுகின்ற மாதாந்த வாடகையில் 70 சதவீதத்தை மாத்திரம் நகர சபைக்குச் செலுத்துவதுடன் அத்தொகை 2009 யூன் 09 ஆந் திகதி முதல் ரூபா 38,500 ஆகக் காணப்பட்டது. நகர சபையின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் அந்த சொத்தைக் கையேற்று முறையான பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றி அதன் பிரகாரம் பொருத்தமான வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்டிருக்குமாயின் மேற்கூறப்பட்ட தொகையை விட கூடுதலான வருமானமொன்றைப் பெறக்கூடியதாக இருந்தமையும், முகாமைத்துவக் கட்டணம் செலுத்தும் தேவையொன்று காணப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

iii. அந்த விருந்தினர் விடுதி வளவில் சில கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தும் அதற்கான அங்கீகாரம் நகர சபையிலிருந்து பெறப்பட்டிருக்கவில்லை.

iv. குத்தகை வாடிக்கையாளருக்கு விருந்தினர் விடுதி வழங்கப்பட்டிருக்கும் போது அதன் அடிப்படையில் ஆதனவரி அறவிடுவதற்கு நகர சபை இதுவரையிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

v. விருந்தினர் விடுதியைச் சுற்றி நிர்மாணிக்கப்பட்டுள்ள மதிலின் ஒரு பகுதி உடைக்கப்பட்டு அந்த நிலத்தில் விற்பனைக் கடையொன்று நடாத்திச் செல்லப்படுவதுடன், அதற்காக நகரசபை அனுமதி வழங்கியமைக்கான சான்றுகள் காணப்படவில்லை. மேலும், அந்த நிர்மாணம் நகரத்தினதும், அந்த விருந்தினர் விடுதியினதும் அழகான தன்மைக்கு இடையூறு விளைவிக்கக் கூடியதாக இருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

vi. நகரசபைக்குச் சொந்தமான விருந்தினர் விடுதி நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் 2012 ஆம் ஆண்டு முதல் கிடைக்க வேண்டிய ரூபா 393,333 தொகையொன்று இதுவரையிலும் அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

(ஊ) வவுனியா நகர சபைக்குச் சொந்தமான 2 விளையாட்டு மைதானங்கள் மற்றும் சிறுவர் பூங்கா என்பன வெளி நிறுவனம்/ அமைப்புக்களினால் பயன்படுத்தப்பட்டு வருமானம் உழைக்கப்படுகின்ற போதும், அந்த வருமானங்கள் கணிப்பிடப்பட்டு நகர சபைக்குப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(எ) நிறுவனத்தின் கணக்குகளின் பிரகாரம் இரண்டு உத்தியோகத்தர்களினால் பெறப்பட்ட ரூபா 38,695 கூட்டுத்தொகையான முற்பணக் கடன் மீதியை பல வருடகாலமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) கணக்காய்வு உத்தியோகத்தர்களினால் இனங்காணப்பட்டிருந்த 14 இடங்களில் அனுமதியற்ற 99 நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்த நிர்மாணங்கள் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் 1982 இன் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி (திருத்த) அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அந்த நிர்மாணங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) நகர சபை எல்லையில் 5 நிறுவனங்களினால் பொருத்தப்பட்டிருந்த தொலைபேசிக் கோபுரங்களின் அளவு மற்றும் அவற்றின் உயரத்தின் அளவு என்பவற்றைக் கவனத்தில்கொண்டு உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதி அந்த நிறுவனத்திலிருந்து இதுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஒ) வவுனியா நகர சபையின் கந்தசாமி வீதியில் காணப்பட்ட பழைய மலசலகூட முறைமை எவ்வித அங்கீகாரமுமின்றி அகற்றப்பட்டு அந்த நிலத்தில் நிர்மாணிக்கப்பட்ட 3 கடைகள் முறையான பெறுகைகள் நடைமுறைகளுக்குப் புறம்பாகவும் தற்போது காணப்படுகின்ற கூறுவிலைகளைவிட மிகவும் குறைந்த தொகைக்கு (மாதத்திற்கு ரூபா 700 வீதம்) வாடகைக்கு வழங்கப்பட்டமையின் அடிப்படையில் நகர சபைக்கு பெறக்கூடியதாக இருந்த வாடகை வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(ஓ) வவுனியா நகர சபை விளையாட்டரங்கின் A9 பிரதான வீதிக்கு எல்லையாகவுள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய நிலத்தில் அந்த

அதிகாரசபையின் அனுமதியின்றி 1.2 மீற்றர் உயரமும், 56 மீற்றர் நீளமும் உடைய கொங்கிரீட் துாணொன்றை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்த நிறுவனத்துடன் ரூபா 851,510 தொகைக்கு உடன்படிக்கை செய்யப்பட்டு அந்த நிர்மாணத்திற்காக கொடுப்பனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அவ்வாறே இந்த நிர்மாணங்கள் பொறியியல் சம்பிரதாயங்களுக்கு புறம்பாகவும் அடிப்படையொன்று இன்றியும் மற்றும் முறையான திட்டமிடலின்றியும் நிர்மாணிக்கப்பட்டிருந்த வடிகாண் முறைமையின் சட்டரின் வேலைக்காக ரூபா 89,994 மிகை மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன், நிர்மாணிக்கப்பட்ட வடிகாண் முறைமையின் நீள அளவு மற்றும் உயர அளவு என்பன முன் அங்கீகாரமின்றி முழுமையாக மாற்றஞ் செய்யப்பட்டிருந்தது. அந்த வேறுபாடுகளுக்காக செயலாளரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த நிர்மாணங்களுக்காக செலுத்தவேண்டிய மொத்தப் பெறுமதியை நிர்மாணங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிட்டு செலுத்தவேண்டியிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

## 2.9 செயலாற்றல்

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் விபரங்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கையை விஞ்சி உத்தியோகத்தர்கள் / 09 ஊழியர்களுக்கு ரூபா 3,774,078 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்ததுடன் 11 பதவிகளுக்குரிய 13 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களின் அடிப்படையில் அந்த பிரிவுகளின் வேலைப்பகுதிகளின் செயல்முன்னேற்றம் கீழ் மட்டத்தில் காணப்பட்டது.

(ஆ) நகர சபையில் அரசாங்க முகாமைத்துவ சேவையில் ஈடுபட்டிருக்கின்ற பெண் உத்தியோகத்தர் ஒருவர் 2015 நவம்பர் 03 ஆந் திகதி முதல் வவுனியா கட்டிடங்கள் திணைக்களத்தின் அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார். அதன் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனமொன்றின் ஊழியரொருவர் வேறொரு திணைக்களத்திற்கு மாற்றப்பட்டமை முறையானதாக இல்லாதிருந்தமையும் அந்த திணைக்களத்தில் ஆற்றப்படுகின்ற சேவைகளுக்காக நகர சபையினால் அந்த பெண் உத்தியோகத்தருக்கு சம்பளம் செலுத்தியமை பிழையாக இருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(இ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையின் பிரகாரம் நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் ஆதனவரி நலனாளிகளிடமிருந்து மீளாய்வாண்டின்

திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டிய ஆதனவரி மீதி ரூபா 38,197,727 ஆக இருந்த போதிலும், ஆதனவரி வருமானம் அறவிடும் வருடாந்த செயல்முன்னேற்றத்தை ஒப்பீடு செய்யும் போது வருமான சேகரித்தலின் செயலாற்றல் கீழ் மட்டத்தில் காணப்பட்டமையால் நிலுவை மீதியில் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 51,298,711 ஆன கடன்பட்டோர் மீதியில் ஆதனவரி, கடை வாடகை மற்றும் களியாட்ட வரி வருமானங்களில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை மீதிகளின் பெறுமதி ரூபா 1,832,419 ஆகும்.

## 2.10 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 2.10.1 உள்ளகக் கணக்காய்வு

நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் மீளாய்வாண்டில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை நிதிப்பிரமாணம் 134(3) இன் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது நகரசபையின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) வருமானக் கட்டுப்பாடு
(ஈ) மோட்டார் வாகன நிர்வாகம்
(உ) உள்ளகக் கட்டுப்பாடு